முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2022 சனவரி

## (104) வணிகச் சூழல்

(Business Environment)

2022-03-27
பிற்பகல்
[02.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** தனியுடமை வியாபாரமொன்றுடன் ஒப்பிடும்போது வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் ஓர் அனுகூலமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) வரையறையற்ற (unlimited) பொறுப்பு
(2) விரைவான தீர்மானமெடுத்தல்
(3) தொடர்ந்தியங்கும் தன்மை இல்லாமை
(4) அதிகளவு மூலதனத்தை ஈர்த்தல்

**1.2** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் ஆகக்கூடிய பங்குதாரர்களின் எண்ணிக்கை:

(1) 2.
(2) 20.
(3) 40.
(4) 50.

**1.3** பின்வருவனவற்றுள் தொடர்பாடல் செயன்முறையின் ஒரு கூறாக (element) **அமையாதது** எது?

(1) அனுப்புநர்
(2) இடர்
(3) பெறுநர்
(4) பின்னூட்டம்

**1.4** பின்வருவனவற்றுள் வெளிநாட்டு வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஒரு முதன்மை ஆவணமாக **அமையாதது** எது?

(1) பங்குச் சான்றிதழ்
(2) வார்நாமம்
(3) மூலச் சான்றிதழ்
(4) வர்த்தக விலைப்பட்டியல்

**1.5** காசோலை ஒன்றின் குறுக்குக் கோடிடலை இரத்துச் செய்யக்கூடியவர் :

(1) காசோலைக்குரியவர் (Drawee) (2) காசோலையை வரைந்தவர் (Drawer)

(3) பணம் பெறுபவர் (Payee) (4) வங்கி

**1.6** பின்வருவனவற்றுள் சிறந்த போக்குவரத்து முறைமை ஒன்றின் ஓர் அம்சமாக (feature) **அமையாதது** எது?

(1) விரைவு (2) பாதுகாப்பு

(3) கிடைப்பனவின்மை (4) கொள்ளளவு

**1.7** இலங்கையிலுள்ள நிகழ் நேர மொத்த தீர்ப்பனவு முறைமை (Real time gross settlement system) யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?

(1) இலங்கை மத்திய வங்கியால்

(2) உரிமம் பெற்ற விசேட வங்கிகளால்

(3) நிதிக் கம்பனிகளால்

(4) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தால்

**1.8** பின்வருவனவற்றுள் தொழில் முயற்சியாண்மையின் சமூக மற்றும் பொருளாதார நன்மையாக **அமையாதது** எது?

(1) தொடர்ந்தியங்கும் தன்மை இல்லாமை

(2) வறுமை ஒழிப்பு

(3) நியாயமான போட்டியை உருவாக்குதல்

(4) புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்

**1.9** பின்வருவனவற்றுள் இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்கள் (SMEs) எதிர்நோக்குகின்ற ஒரு சவாலாக இருப்பது எது?

(1) அளவுத்திட்ட பொருளாதாரங்களின் குறைபாடு

(2) திறன்களின் பற்றாக்குறை

(3) மோசமான முகாமைத்துவ நடைமுறைகள்

(4) மேற்கூறிய யாவும்.

**1.10** பின்வருவனவற்றுள் SME களின் செயலாற்றுகையை மேம்படுத்துகின்ற ஒரு வழிமுறை **அல்லாதது** எது?

(1) நவீன தொழில்நுட்பம் (2) தொழில்முயற்சிக் கலாசாரம்

(3) நிதிக்கான அணுகல் (4) மோசமான தலைமைத்துவம்

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.11** பணச் சந்தையானது பங்குகள், தனிச்சங்கள் போன்ற சாதனங்களை (instruments) கையாள்கிறது.

**1.12** இழப்பீட்டுக் கோட்பாடானது ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடையதாகும்.

**1.13** மூன்றாம் தரப்பு ஒன்றிற்கு இரகசியத் தகவல்களை விற்பனை செய்வது வணிக ஒழுக்கநெறி மீறலுக்கான ஓர் உதாரணமாகும்.

**1.14** 300 இற்கும் மேற்பட்டவர்களை ஊழியர்களாகக் கொண்டுள்ள ஒரு நிறுவனமானது சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனமொன்றாகக் (SME) கருதப்படுகிறது.

**1.15** வீட்டுச் செயற்பாடுகளுக்கு அதிக நேரத்தை ஒதுக்க வேண்டிய தேவையானது பெண் தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்குகின்ற ஒரு சவாலாகக் காணப்படுகிறது.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினாவின் இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதுக.*

**1.16** தேவைகளுக்கு (needs) இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

**1.17** தொழில் முயற்சியாண்மை (entrepreneurship) என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** பொருள்கள் மற்றும் சேவைகளுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**1.19** தொழில் முயற்சியாண்மைக்கான தேவையின் வளர்ச்சிக்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

**1.20** கூட்டு முயற்சியொன்றின் (joint venture) இரண்டு (02) அம்சங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**"குறுதல"** என்பது **அமில** என்பவருக்குச் சொந்தமான ஒரு சிறப்பங்காடிச் சங்கிலி ஆகும். தற்போது இது கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் 12 விற்பனை நிலையங்களைக் கொண்டிருக்கிறது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் **"குறுதல"** இனை விரிவுபடுத்தும் நோக்கில், **அமில** அதிக மூலதனத்தைத் திரட்ட விரும்புவதுடன் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் தனது வியாபாரத்தை பட்டியலிடுவதற்கும் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) (i) "**குறுதல**" தற்போது எவ்வகையான வணிக நிறுவனமாக இருக்கிறது என்பதை **இனங்காண்க.** (01 புள்ளி)

(ii) அந்த வகையான வணிக நிறுவனமொன்றின் மூன்று (03) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றின் மூன்று (03) அம்சங்களை (features) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட கோகு கம்பனி** என்பது தேங்காய் மட்டைகளைத் தமது முதன்மையான மூலப் பொருளாகப் பயன்படுத்தும் நார்த் தொழிற்சாலை ஒன்றாகும். மட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்ற நார்கள் தொழிற்சாலைக்கு அண்மையிலுள்ள கட்டடம் ஒன்றில் களஞ்சியப்படுத்தப்படுகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளையில், இந்தக் களஞ்சிய அறையில் தீ பரவல் ஏற்பட்டு, **வரையறுக்கப்பட்ட கோகு கம்பனிக்கு** கிட்டத்தட்ட ரூபா 1 மில்லியன் இழப்பை ஏற்படுத்தியது. **வரையறுக்கப்பட்ட கோகு கம்பனியால்** காப்புறுதியொன்று பெறப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட கோகு கம்பனிக்குப்** பொருத்தமான காப்புறுதி ஒன்றைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட கோகு கம்பனியால்** பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதியில், காப்புறுத்தத்தக்க நாட்டம் மற்றும் அண்மைக் காரணக் கோட்பாடுகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) காப்புறுதியானது ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் இரண்டு (02) வழிமுறைகளை (ways) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**ODO** என்பது தமது விநியோக அணியினர் மூலம் உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களிலிருந்து நுகர்வோருக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்கின்ற ஒரு நிகழ்நிலை (ஒன்லைன்) தளமாகும். கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக பல புதிய உணவகங்கள் தமது விநியோகங்களை மேற்கொள்வதற்கு **ODO** உடன் பங்காளர்களாக இணைந்ததால் வியாபார இலாபம் அதிகரித்திருந்தது. **ODO** தளத்தைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்கள் தமக்கு விருப்பமான உணவகம் அல்லது வெதுப்பகத்தைத் தெரிவுசெய்து, கொடுப்பனவைச் செய்த பின்னர் உணவுப் பொருள்களை ஓடர் (order) செய்கின்றனர்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) முறையாக முகாமை செய்யப்படும் விநியோக வழிமுறை ஒன்றின் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) நிகழ்நிலை உணவு விநியோக முறைமை ஒன்றைப் பயன்படுத்தும்போது **ODO** இன் நுகர்வோரால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய மூன்று (03) காரணிகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) **ODO** இன் வணிகம் மீது அரசாங்கம் தலையீடு செய்கின்ற இரண்டு (02) வழிமுறைகளை (ways) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

***லலித் பண்டார*** என்பவர், பல தசாப்தங்களுக்கு முன்னர் கஹட்டகல சந்தியில் **பண்டார தேநீர் கடை**யினை ஆரம்பித்த **டிகிரி பண்டார** என்பவரின் பேரனாவார். இந்தத் தேநீர் கடை பிரதான பாதைக்கு அண்மையில் இருந்ததால் கஹட்டகல நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளில் அநேகமானோர் இந்தத் தேநீர் கடைக்கும் வருகை தருகின்றனர். **லலித்** தமது குடும்ப வணிகத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்வதுடன் அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக கடன் அட்டைக் கொடுப்பனவு வசதிகளுடன்கூடிய ஒரு சிறிய சிறப்பங்காடி மற்றும் நினைவுப் பொருள்களைக்கொண்ட ஒரு வணிக வளாகம் ஆகியவற்றுடன் தனது தேநீர் கடையை விரிவுபடுத்தியிருந்தார். அவர் தமது வணிகத்தை விரிவாக்குவதற்காக வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து கடனொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளார். **பண்டார**வின் **தேநீர் கடை** என்பது வங்கியின் பழைய வாடிக்கையாளர்களில் ஒருவராக இருந்ததால் வங்கி முகாமையாளர் கடன் வழங்குவதற்கு ஆதரவளித்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **பண்டார தேநீர் கடை**யினால் பயன்படுத்தப்படும் பணத்தின் வகைகள் (types of money) இரண்டினை (02) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) தனது வணிகத்தை நடத்திச் செல்வதில், வர்த்தக வங்கி ஒன்றிடமிருந்து **பண்டார**வினால் பெற்றுக் கொள்ளக்கூடிய, கடன் வசதி தவிர்ந்த நான்கு (04) சேவைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) வணிகச் சூழலைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், **பண்டார**வின் **தேநீர் கடையால்** அடைந்து கொள்ளக்கூடிய இரண்டு (02) நன்மைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள)

## வினா 06

இயற்கை இறப்பரிலிருந்து இறப்பர் தலையணைகள், மெத்தைகள் மற்றும் கையுறைகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதில் ஈடுபடுகின்ற **ரூபெக்ஸ்** கம்பனியானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனியாகும். அவர்களுடைய உற்பத்திப் பொருள்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன் அவை பிரசித்தி பெற்ற சிறப்பங்காடியின் பண்டக்குறி ஒன்றின் கீழ் வாடிக்கையாளர்களிடையே பிரபல்யமாகவுள்ளது. **ரூபெக்ஸ்** இன் உற்பத்திச் செயன்முறையானது மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர் ஈடுபாட்டுடன்கூடிய அரைவாசி தன்னியக்கப்படுத்தப்பட்ட செயன்முறை ஆகும். எவ்வாறாயினும், அதன் செயற்பாட்டின் சில படிமுறைகளுக்கு திறன்மிக்க ஊழியர்கள் **ரூபெக்ஸ்** இற்குத் தேவையாக உள்ளனர். உற்பத்திப் பணியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதும் அவர்களுக்கு ஒரு மாத பணிப் பயிற்சி வழங்கப்படுகிறது. எனினும், தவிர்க்கமுடியாத துர்நாற்றம் நிறைந்த பணிச் சூழல் காரணமாக, ஊழியர் வெளியேற்றம் குறிப்பிடத்தக்களவு உயர்வாகக் காணப்படுகிறது. அந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற ஆடைத்தொழிற்சாலைகளில் நிலவும் தொழில் வாய்ப்புகள்கூட **ரூபெக்ஸ்** இன் உயர்ந்தளவு ஊழியர் வெளியேற்றத்திற்கு பங்களிப்புச் செய்கின்றன. இத்தகைய ஊழியர் பிரச்சினையுடன், அவர்கள் புதிய தொழிற்சாலை தன்னியக்கச் செயற்றிட்டங்களில் நுழைந்துள்ளனர். மேலும், வீட்டுத் திட்டங்களுக்காக இறப்பர் தோட்டங்களை விற்பனை செய்வதானது மூலப்பொருள்களுக்கான தேவையில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக, **ரூபெக்ஸ்** தாய்லாந்தில் உள்ள வெளிநாட்டு மூலப்பொருள் வழங்குநர்மீது தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

கோவிட் 19 நோய்ப்பரவலானது **ரூபெக்ஸ்** மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்திய அதே வேளை சாதகமான தாக்கத்தையும் ஏற்படுத்தியிருந்தது. ஐரோப்பிய சிறப்பங்காடிகளில் இருந்து கிடைக்கின்ற சில வழக்கமான ஓடர்கள் (கட்டளைகள்) இரத்துச் செய்யப்பட்டிருந்தாலும்கூட அவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்வனவாளர்களிடமிருந்து கையுறைகளுக்கான புதிய ஓடர்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். துரிதப்படுத்தப்பட்ட தொழிற்சாலைத் தன்னியக்கப்படுத்தல் செயன்முறையானது கோவிட் 19 நோய்ப் பரவல் காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களுடன் தொழிற்சாலையை இயக்குவதற்கு வழிவகுத்தது. மறுபுறத்தில், கோவிட் 19 நோய்ப் பரவலால் ஏற்பட்ட டொலர் நெருக்கடியானது **ரூபெக்ஸின்** மூலப்பொருள் இறக்குமதியையும் பாதித்திருந்தது. எவ்வாறாயினும், அரசாங்கத் தலையீட்டுடன் உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு வங்கிகள் மற்றும் வேறு பல அரச நிறுவனங்களால் வழங்கப்பட்ட சலுகைகள் **ரூபெக்ஸ்** இற்கான ஒரு நிவாரணமாக அமைந்திருந்தன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) சர்வதேச ரீதியில் வணிகம் செய்வதன் ஊடாக **ரூபெக்ஸ்** இனால் பெற்றுக்கொள்ளப்படும் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) SWOT இனைப் பயன்படுத்தி **ரூபெக்ஸின்** வணிகச் சூழலை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(c) **ரூபெக்ஸிற்கு** போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் (logistics) சேவைகள் ஏன் முக்கியமானவை என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(d) இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்வதில் **ரூபெக்ஸின்** பங்களிப்பினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) முதலீட்டாளர்களுக்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் முக்கியத்துவத்திற்கான மூன்று (03) காரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |